# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

மனு எண்: 872/2017/ஊராட்சி

ஆணை எண்: 169/2017

நாள்: 22/06/2017

இரா. தங்கராஜ்,
207-A 51 நேதாஜி நகர் வடக்கு,
மதுரை ரோடு, உசிலம்பட்டி,
மதுரை மாவட்டம் - 625 532. – மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
உசிலம்பட்டி. – எதிர்மனுதாரர்

## ஆணை

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி பஞ்சாயத்து யூனியன், உசிலம்பட்டி கிராமத்தில் வசிக்கும் திரு. இரா. தங்கராஜ், அவருடைய 19.6.2017 நாளிட்ட புகார் மனுவில், அவருக்கு சொந்தமான பட்டா எண்.3922 சர்வே எண்.107/4B2ல், அவருடைய அனுமதி பெறாமல் SBM (G) திட்டத்தின்கீழ் சம்பந்தம் இல்லாத திரு. முருகன் மற்றும் திருமதி. மீனாட்சி ஆகிய இருவருக்கும் கழிவறை கட்டப்பட்டுள்ளது. இது சட்ட விரோதம் என்றும், சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள கழிப்பறைகளை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. க. இளங்கோவன் அவர்களுக்கு 27.1.2017 அன்று புகார் மனு அளிக்கப்பட்டு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாததால், 17.3.2017 அன்று புகார் மனு மீது

மேற்கொண்டுள்ள நடவடிக்கையின் விபரத்தினை தெரிவிக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல் கோரப்பட்டது என்றும், அதற்கு தனியரின் இடத்தில் அமைக்கப்பட்ட உறிஞ்சிகுழி அகற்றப்பட்டுவிட்டது என்று பதில் பெறப்பட்டது என்றும், ஆனால் இன்னும் உறிஞ்சிகுழி அகற்றப்படவில்லையெனத் தெரிவித்து, நடவடிக்கை எடுக்காத வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. க. இளங்கோவன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும், பட்டா நிலத்தில் கட்டப்பட்டுள்ள கழிவறையினை அகற்ற தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு வடுகபட்டி ஊராட்சியை சார்ந்தது ஆகும். எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22 -ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.
22/6/17

<u>பெறுநர்</u>

திரு. இரா. தங்கராஜ்,
207-A 51 நேதாஜி நகர் வடக்கு,
மதுரை ரோடு, உசிலம்பட்டி,
மதுரை மாவட்டம் - 625 532.

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மதுரை மாவட்டம், மதுரை.

22/6/17
22/6/17